## 2.62 விரிவாக்க அலுவலர்கள் (சிறுசேமிப்பு) தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அல்லது அடுத்த பதவி உயர்வு பெறும்வரை பணிபுரிய அனுமதித்தல்

ஊரக வளர்ச்சி (பஅ4) துறை

அரசாணை (நிலை) எண். 251 நாள் : 8.12.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.585 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்.12.4.84.
2. அரசாணை (நிலை) எண்.202 நிதி(சிறுசேமிப்பு) துறை நாள்.18.6.98
3. சிறுசேமிப்பு மற்றும் பரிசு சீட்டு ஆணையர் நேர்முக கடித எண்.சி1/6467/97, நாள்.19.8.98 மற்றும் 9.4.99
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித ந.க.எண்.75714/98/சி2 நாள்.30.9.98.

**ஆணை**

ஒரு பணி விதி அமுலாக்கத்தின்போது படிக்கப்பட்ட அரசாணை ஒன்றின்படி விரிவாக்க அலுவலர் பதவியிலிருந்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வு பெற கீழ்கண்ட பணிகளில் பணிபுரிந்திருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | = | ஒரு வருடம் |
| 2. | விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) அல்லது (ஆதிதிராவிடர் நலம்) | = | ஒரு வருடம் |
| 3. | விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) | = | ஒரு வருடம் |

2. படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் ஏனையவற்றுக் கிடையே விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) முழுநேர சிறுசேமிப்பு விரிவாக்க அலுவலராக மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வரசாணையின்படி விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) ஆக மூன்றாண்டு காலம் பணியாற்றுபவர்கள் ஏனைய பணிகளில் நிர்வாகம் மற்றும் ஊராட்சி பணியாற்றாமல் போனால், அவர்களின் பதவி உயர்விற்கு தகுதி பெற வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படும் எனவும், எனவே நடைமுறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) பதவியில் உள்ளவர்களை, பதவி உயர்விற்கான தகுதி பெற மிக குறுகிய காலத்தில் வேறு பணியிடங்களில் மாற்றம் செய்து வருவதாகவும் இதனால் சிறுசேமிப்பு வசூல் மிகவும் பாதிக்கப்படுவதாகவும், படிக்கப்பட்ட கடிதம் மூன்றில் சிறுசேமிப்பு மற்றும் பரிசு சீட்டு ஆணையர் தெரிவித்து இச்சிரமங்களை நீக்கிட தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப்பணி சிறப்பு விதிகளுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யக் கேட்டுக்கொண்டுள்ளார்.

| | |
|---|---|
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) ஒரு வருடம் |
| (பதவி உயர்வு) | விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) ஒரு வருடம் |
| | விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) ஒரு வருடம் |

3. மேற்குறிப்பிடப்பட்ட சிறுசேமிப்பு மற்றும் பரிசுசீட்டு ஆணையரின் கருத்துக்களை ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. படிக்கப்பட்ட கடிதம் நான்கில் ஊரக வளர்ச்சி இயக்குநர் விரிவாக்க அலுவலர்களை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலாளர் (விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) பணியிடத்தில் ஒரு வருடம் மற்றும் விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) பணியிடத்தில் ஒரு வருடம் ஆகிய இரண்டு வருடங்கள் பணி முடித்தவர்களை இறுதியாக விரிவாக்க அலுவலர்கள் (சிறுசேமிப்பு) ஆக பணி நியமனம் செய்து அவர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரையிலோ அல்லது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வு பெறும் வரையிலோ, விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) ஆக தொடர்ந்து பணி புரிய அனுமதிக்கலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை அரசு ஆய்வு செய்தது. விரிவாக்க அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் தலா ஒவ்வொரு வருடம் முறையே விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) மற்றும் விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) ஆக இரண்டு வருடங்கள் பணி முடித்தவர்களை விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) ஆக பணி நியமனம் செய்து மூன்று ஆண்டுகள் வரையிலோ அல்லது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வு பெறும் வரையிலோ, விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு) ஆக தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்று அரசு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

5. ஊரக வளர்ச்சி இயக்குநர், இது குறித்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலை பணி சிறப்பு விதிகளுக்கு திருத்தம் வெளியிடுவதற்கு தனியே செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்